செ.வெ.எண்: 17 நாள்:07.08.2021

**திருப்பூர் மாவட்டத்தில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மென்பட்டு சேலைகள், கோரா காட்டன் சேலைகள், கோரா சேலைகள், காட்டன் சேலைகள், பெட்ஷீட்கள், துண்டு வகைகள், மிதியடிகள் மற்றும் பட்டு அங்கவஸ்திரங்கள் சுமார் 25.00 இலட்சம் மதிப்பில் கண்காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.**

**இக்கண்காட்சி 07.0.8.2021 மற்றும் 09.08.2021 ஆகிய இரு தினங்கள் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் 7-வது தேசிய கைத்தறி தினத்தினை முன்னிட்டு சிறப்பு கைத்தறி கண்காட்சியினை தொடங்கி வைத்து தகவல் !!!**

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில், கைத்தறி மற்றும் தூணிநூல் துறையின் சார்பில் 7-வது தேசிய கைத்தறி தினத்தினை முன்னிட்டு சிறப்பு கைத்தறி கண்காட்சியினை (07.08.2021) அன்று தொடங்கி வைத்தார்.

இந்திய திருநாட்டில், விவசாயத்திற்கு அடுத்தபடியாக உள்ள நெசவுத் தொழிலினை சிறப்பிக்கவும், வளர்ச்சியடையச் செய்யவும் இந்திய அரசினால் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 7ஆம் நாளினை “தேசிய கைத்தறி தினம்” ஆக 2015 ஆம் ஆண்டு அறிவித்து, அதனை கைத்தறி மற்றும் துணிநூல் தறையினால் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக 7-ஆவது தேசிய கைத்தறி தின கொண்டாட்டங்களை தமிழ்நாட்டில் மாவட்டத் தலைநகரங்களில் 07.08.2021 அன்று தேசிய கைத்தறி தின சிறப்பு கண்காட்சிகள் நடத்த கைத்தறி மற்றும் துணிநூல் துறையினால் அறிவுரைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, இச்சிறப்பு கண்காட்சியில் தமிழ்நாட்டில் கைத்தறி துறையில் புகழ்பெற்ற திருப்பூர் மாவட்டத்தில்

உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மென்பட்டு சேலைகள், கோரா காட்டன் சேலைகள், கோரா சேலைகள், காட்டன் சேலைகள், பெட்ஷீட்கள், துண்டு வகைகள், மிதியடிகள் மற்றும் பட்டு அங்கவஸ்திரங்கள் சுமார் 25.00 இலட்சம் மதிப்பில் கண்காட்சிப்படுத்தப்பட்டன.இக்கண்காட்சியில் 25-க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கலந்துகொண்டுள்ளன. இக்கண்காட்சி 07.0.8.2021 மற்றும் 09.08.2021 ஆகிய இரு தினங்கள் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறுகிறது.

மேற்படி கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள கைத்தறி இரகங்களின் விற்பனைக்கு தமிழக அரசினால் அனுமதிக்கப்படும் 20% தள்ளுபடி வழங்கப்பட்டது.

மேலும், இவ்விழாவில் கைத்தறி நெசவாளர்களுக்கு முத்ரா கடன் திட்டத்தின்கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பிற்கு கடன் உதவியும், கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.2.47 இலட்சம் மதிப்பிற்கு திட்டத் தொகையும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.லட்சுமணன், திருப்பூர் சரக கைத்தறி மற்றும் துணிநூல், உதவி இயக்குநர் திரு.ச.மணிமுத்து மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**